# தோழர் சி. டி. நாயகம் வழக்கு.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூலை. 8.

இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகக் கைதியான தோழர் சி. டி. நாயகம் அவர்கள் மீது ஏற்பட்டுள்ள வழக்கு இன்று பிற்பகல் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் தோழர் குன்னி கிருஷ்ணன் நாயர் அவர்கள் முன் விசாரணைக்கு மீண்டும் வந்தது. அப்போது ரகசியப் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தோழர் கே சவமேனன் சாக்ஷியங் கூறினார்.